## மா.சுப்பிரமணியன் தலைமையில் இயங்கும் கலைஞர் கணினி கல்வியகம் பட்டமளிப்பு விழா!

# சமூக நீதி கோட்பாட்டை முதன்மையாக கொண்டிருக்கின்ற தி.மு.கழகம்தான் தமிழ்நாட்டிற்கு எப்போதும் காவல் அரணாக இருக்கும்!

## விழாவில் “இனமுரசு” சத்யராஜ் சிறப்புரை!

**சென்னை, ஜூலை 22–**

**சமூகநீதிக் கோட்பாட்டை முதன்மையாகக் கொண்டிருக்கின்ற தி.மு. கழகம்தான் தமிழ்நாட்டிற்கு எப்போதுமே காவலரணாக இருக்கும் என்று மேனாள்அமைச்சர்மா.சுப்பிரமணியன் தலைமையில் இயங்கும் சைதை கலைஞர் கணினி கல்வியகம் – கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மைய பட்டமளிப்பு விழாவில் “இனமுரசு” சத்யராஜ் பேசினார்.**

சென்னை சைதாப்பேட்டை பஜார் சாலையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் - மேனாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையின்கீழ் செயல்படும் கலைஞர் கணினி மையம் - கலைஞர் மகளிர் திறன்மேம்பாட்டு மையம் ஆகியவற்றில் பயிற்சி பெற்று பயிற்சி முடித்தவர்களுக்கு பட்டயம் மற்றும் நினைவு பரிசுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் (19-7-2026) சைதாப்பேட்டையில் நடைபெற்றது.



இவ்விழாவில் நாத்திக நன்னெறிச் செம்மல் - இனமுரசு சத்யராஜ் அவர்கள் கலந்துகொண்டு பட்டயங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். அவ்வுரை வருமாறு:-

எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. பட்டம் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**என்னாலும் அவர்தான் அமைச்சர்!**

என்னுடைய அன்புத்தம்பி மா.சுப்பிரமணியன் அவர்களை முன்னாள் அமைச்சர் என்று நான் சொல்லமாட்டேன். என்னாலும் அவர்தான் அமைச்சர். ஏனென்றால் இன்னாள் அமைச்சருக்கும் அவர்தான் வழிகாட்டி. இன்னாள் சுகாதார அமைச்சர் யாரென்று தெரியவில்லை எனக்கு. இவர் அமைத்துக்கொடுத்தப் படிக்கட்டுகளில்தான் இன்றைய அமைச்சர் மேல் வந்து நிற்கிறார். அதனால் இன்றைய அமைச்சர், மா.சுவை நன்றியோடு நினைத்துப் பார்த்துக்கொண்டிருப்பார். வெளியில் பேசவில்லையென்றாலும் கூட அவருடைய மனச்சாட்சிக்குத் தெரியும்.

மா.சு. சமூக வலைத்தளங்களான பேஸ்புக், இன்ஸ்டா, ட்விட்டர் எதிலேயும் கணக்கு இல்லை. அதனால் பார்ப்பதில்லை. மா.சு. 21.1 கி.மீட்டரில் 169 மாரத்தான் ஓடியுள்ளார். இது மிகப்பெரிய சாதனை. இதை வந்து வெளியிலிருந்து பார்த்து, உனக்கு எதுக்குத் தேவையில்லாத வேலை என்று சமூகவலைத்தளங்களில் விமர்சிப்பது மிகப்பெரிய தவறு. உடற்பயிற்சி என்பது என்னைக்கும் தேவை, எந்த வயதிலிருந்தாலும் அது தேவையான ஒன்றுதான்.

ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்பதைப் பற்றியெல்லாம் கேட்டார்கள். முதலில் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பங்கேற்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட கட்சியே அல்ல. 1949ஆம் ஆண்டு ராபின்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு கட்சி. உங்களனைவருக்கும் தெரியும். நான் உங்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

தி.மு.க.வின் முதல் மாநில மாநாடு 1952இல் நடக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற அம்மாநாட்டில் வாக்கெடுப்பு நடக்கிறது. 1952 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா? என்று கேட்கிறார்கள். பெரும்பாலானவர்கள் நாம் தேர்தலில் நிற்க வேண்டாம் நாம் பெரியார் வழியில் சமூகசீர்திருத்த இயக்கமாகவே நிற்போம் என்று சொன்ன இயக்கம்தான் தி.மு.க. தி.மு.க.வின் முதல் தொண்டு சமூகத்தொண்டுதான். சமூக சேவைதான். சமூகநீதிக்காகப் பாடுபடுவதுதானே தவிர, தேர்தலில் நிற்பது இரண்டாவதுதான்.

**தி.மு.கழகம் போட்டுக் கொடுத்த பாதை!**

அதற்குப் பிறகு 1957இல் நடைபெற்றத் தேர்தலில் தி.மு.கழகம் போட்டியிடுகிறது. அத்தேர்தலில் 15 இடங்களில்தான் வெற்றிபெற்றார்கள். 1962ஆம் ஆண்டு 50 தொகுதிகளில் தி.மு.கழகம் வெற்றிபெறுகிறது. அந்த 50 தொகுதிகளிலும் ஏற்கெனவே இருக்கிற 15 தொகுதிகளிலும் தி.மு.வை தோற்கடித்தே ஆக வேண்டும் என்று அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் கங்கனம் கட்டிக்கொண்டு அலைந்து வெற்றி பெறுகிறார்கள். ஆனால் அந்த 15 இடங்களில் தோற்கடிக்கப்படுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள்.

அதன்பிறகு 1967ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிக்கு வருகிறது. இதுதான் தி.மு.க.வின் வரலாறு. அதனால் மக்களுக்கு செய்கிற சேவைதான் தி.மு. கழகம் என்பது தொண்டர்களுக்குத் தெரியும். தலைவர்களுக்குத் தெரியும். என்றைக்குமே முதன்மையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கலைஞர் என்கிற பெயராலே நடைபெறுகிற இந்த நிகழ்ச்சி, தி.மு.கழகத்தினுடைய முதல் கொள்கையே இட ஒதுக்கீடும், கல்வியும், சமூகத்தில் கீழிருக்கிறவர்கள் மேல்நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அவர்களது கொள்கை. அது ஆட்சியில் இருந்தாலும் சரி. இல்லாவிட்டாலும் சரி.

ஆட்சியில் இருந்தால் தி.மு.க. ஆளும் கட்சி. ஆட்சியில் இல்லாவிட்டால் ஆளும் கட்சியை - ஆளும் கட்சி. யார் ஆளும் கட்சியாக இருந்தாலும் தி.மு.கழகம் போட்டுக்கொடுத்தப் பாதையில்தான் ஆட்சி செய்தாக வேண்டும். இங்கே சொன்னார்கள். நம் ஆட்சியில் வாங்கிக்கொடுத்த ஆட்டோவில் வேறு கட்சி கொடிப் பறக்கிறது என்று. பார்ப்போம் அது எவ்வளவு நாளைக்குப் பறக்கிறது என்று.

நமது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில், கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானம் இருந்தால்தானே நீ குதிரைப்பந்தயம் நடத்துவாய். மைதானமே இல்லாமல், அங்கே ஒரு சிறப்பான பூங்கா அமைப்பதற்கு வேலைகள் நடைபெற்றது. இன்றும் ஒன்றரை ஆண்டுகளில் அந்த செம்மொழி பூங்கா திறக்கப்படும்போது, அப்படியொரு பூங்காவே இல்லை என்று சொல்கிற நிலை வரும் என்று மா.சு. அவர்கள் சொன்னார்கள்.

அதனால் அந்த பூங்காவை எதிர்காலத்தில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராகி திறந்து வைப்பதற்குக்கூட வாய்ப்பிருக்கிறது. அவரால் உருவாக்கப்பட்ட பூங்காவை, அவரே தொடங்கி வைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் அவசரப்பட்டு மாற்றம், மாற்றம் என்று சொல்லி வாக்களித்துவிட்டார்கள். குழந்தைகள், குட்டீஸ் எல்லாம் நம் நண்பா, நண்பிகளைப் போட்டு மடக்கி போட்டுவிட்டார்கள்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது அனைவரும் படிக்க வேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம். இந்த இயக்கத்தின் வரலாறு 1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்பே ஒருங்கிணைந்த மாகாணமாக, சென்னை மாகாணம் இருந்தது. வெள்ளைக்காரர்கள் காலத்திலேயே இருந்தது. இரண்டு அரசுகள் சேர்ந்து ஆட்சி நடத்துவதாக இருந்தது. 1921 முதல் 1926 ஆம் ஆண்டு பனகல் அரசர் தலைமையில் கவர்னர் ஜெனரல் ஆட்சி ஜஸ்டிஸ் கட்சி. அந்த ஆட்சியில்தான் முதன்முதலில் இடஒதுக்கீட்டைக் கொண்டு வருகின்றனர்.

**சமஸ்கிருதம் படித்தால் மருத்துவம் படிக்க முடியும் என்ற நிலை!**

அப்போதுதான் மிகப்பெரிய ஒரு சூழ்ச்சி இருந்தது. சமஸ்கிருதம் படித்தால்தான், மருத்துவம் படிக்க முடியும் என்கிற ஒரு நிலை இருந்தது. சமஸ்கிருதத்திற்கும், மெடிக்கல் காலேஜிக்கும் ஏதாவது ஒரு சம்பந்தம் இருக்கிறதா? சமஸ்கிருதம் தெரிந்தால்தான் மருத்துவம் படிக்க முடியும் என்கிற நிலைமை இருந்தால்தான், ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் மருத்துவம் படிக்க முடியும் என்பதற்காகதான். அதை ஒழித்ததும் நீதிக்கட்சிதான்.

சில கிராமங்களில் பிற்படுத்தப் பட்டோர் மட்டும் பயணம் செய்கிற பேருந்துகளில் பட்டியலின மக்கள் பயணம் செய்யக்கூடாது என்கிற ஒரு நிலை இருந்தது. அதை ஒழித்துக்கட்டியதும் நீதிக்கட்சிதான். இனிமேல் இந்த நிலை நீடித்தால் லைசென்ஸை ரத்துசெய்து விடுவோம் என்று நீதிக்கட்சி எச்சரித்தது. இப்படிப்பட்ட ஆட்சிதான் தி.மு.க.வின் நீட்சி. அதனால் இன்றைக்கு யார் ஆட்சிக்கு வந்தாலும், எங்கள் கொள்கைத் தலைவர்கள் பெரியார், அண்ணா, அம்பேத்கர் என்று சொல்லிதான் ஆகணும். எங்கள் இரண்டு கண்கள் திராவிடமும் - தமிழ்தேசியமும் என்று சொல்லித்தான் ஆகணும். அந்தக் கட்டத்திற்கு, கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டதுதான் திராவிடர் இயக்கத்தின் மிகப்பெரிய சாதனை.

கலைஞருடைய சாதனைகளை நினைத்துப் பார்க்கும்போது எண்ணற்ற சாதனைகள். 1967 ஆட்சிக்கு வந்தபிறகு அண்ணா ஓர் ஆண்டில் மறைந்துவிடுகிறார்கள். அதன்பிறகு கலைஞர் ஆட்சிக்கு வருகிறார். 1977 வரையிலும் கலைஞர் 9 ஆண்டுகள் ஆட்சியில் இருக்கிறார். ஆட்சியில் இருக்கும்போது கலைஞர் விதைத்த விதைகள், ஒரு சட்டம் இயற்றும்போது அது பயனளிப்பதற்கு, ஏனென்றால் முதல் தலைமுறைப் பட்டதாரிகள் அப்போதுதான் உருவாகிறார்கள். அப்போது விதைத்த விதைகள் இன்று வளர்ந்து மரமாக, காய்களாக, கனிகளாக பூத்துக்குலுங்கி, இந்தியாவிலேயே தமிழ்நாடுமுதல் மாநிலமாக திகழ்கிறது.

**ஆட்சியில் இல்லாவிட்டாலும் தொடர்ந்து மக்கள் பணி!**

தி.மு.கழகம் திராவிடர் இயக்கம் ஆட்சிக்கு வந்தபிறகுதான் படிப்படியாக தமிழ்நாடு முன்னேறிக்கொண்டு வருகிறது. நமது திராவிட மாடல் முதல்வர் காலத்தில் இந்தியாவில் தமிழ்நாடு முதலாவது மாநிலமாக இருக்கிறது. கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், வளர்ச்சித்திட்டங்களிலும், நலத் திட்டங்களிலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்து வருகிறது. அதை தக்கவைத்துக்கொண்டாலே போதும். அதை பெரிதுப்படுத்துங்கள். நீங்கள் பேரை வேண்டுமானாலும் மாத்திக்கொண்டு போங்கள், ஆனால் திட்டத்தை கைவிட்டுவிடாதீர்கள். மக்கள் நலன்தான் முக்கியம். ஆகவே இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள்கூட தி.மு.கழகம் அமைத்துத்தந்த பாதையில் பயணம் செய்யுங்கள் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது இன்றைக்கு முன்னுதாரணமான வளர்ச்சியாக இருக்கிறது. தம்பி மா.சு. அவர்கள் சொன்னார்களே. ஆட்டோ ஓட்டுகிற பெண்கள் சைதைத்தொகுதியில் உள்ள அளவுக்கு வேறு எங்கேயும் இல்லை என்று. இதெல்லாம் மிகப் பெரிய சாதனை. இந்த சாதனையெல்லாம் தி.மு.கழகத்தின் தோழர்களும், தொண்டர்களும், அமைச்சர்களும், எம்.எல்.ஏக்களும், ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொடர்ந்து மக்கள் பணிகள் நடந்துகொண்டேதான் இருக்கும். அதுதான் இந்த தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணம்.

தந்தை பெரியார் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சமூகநீதிப் போராட்டம் எந்த நிலையிலும் கைவிடாது தொடர்ந்து நடந்துகொண்டேதான் இருந்தது. பெருந்தலைவர் காமராஜர் காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் காமராஜருக்கு தந்தை பெரியார் மீது மிகப்பெரிய பற்றும், மரியாதையும் இருந்தது. பெரியார் நிறைவேற்றித்தந்த பல திட்டங்களை சட்டங்களாக பெருந்தலைவர் காமராஜர் நிறைவேற்றினார்கள். குழந்தைகளைப் படிக்க வைத்தார். பள்ளிகளைத் திறந்தார். இவையெல்லாம் திராவிட இயக்க சிந்தனைக்கொண்ட தலைவர்களால்தான் வந்தது. ஆகவே இந்த இயக்கம் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தமிழ்நாட்டின் நலனுக்காகவே பாடுபட்டுக்கொண்டே இருக்கும்.

**நான் பெரியாரின் தொண்டன்!**

என்னை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்தபோது தி.மு.க ஆளும்கட்சி என்றால் கூட வரவில்லை என்று தப்பித்துக் கொள்ளலாம். இப்போது எதிர்க்கட்சியாக இருக்கும்போது தி.மு.க.விற்கு கண்டிப்பாக துணையாக நிற்பேன். ஆளுங்கட்சி என்றால் அட்டைபோல் ஒட்டிக்கொள்வது, எதிர்க்கட்சியாக இருந்தால் பம்மி போகும் கட்டப்பா நானல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டப்பாவாகக் கூட நீங்கள் என்னை எடுத்துக்கொள்ளுங்கள். நான் பொதுவான மனிதன். நான் பெரியாருடையத் தொண்டன். அதுதான் என்னுடைய நிலைப்பாடு.

பெரியாருடைய தொண்டன் மிகவும் இணக்கமாக இருக்கும் இயக்கம் தி.மு.கழகம்தான். அதனால் தி.மு.கழகத்திற்கு துணையாக, பக்கபலமாக அப்படியெல்லாம் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. ஏனென்றால் அது ஒரு பெரிய ஆலமரம். அந்த ஆலமரத்தில் எத்தனையோ விழுதுகள் இருக்கிறது. அந்த ஆலமரத்தின் நிழலில் இளைப்பாருகிறவன். ஏனென்றால் நாங்கள் நடிப்பதற்கு இன்றைக்கு வருமானம் வருகிறதென்றால், தமிழ்நாடு நன்றாக இருப்பதால்தான். அதனால் எந்தவகையில் பார்த்தாலும், இந்த சமூகநீதி கோட்பாட்டை முதன்மையாகக் கொண்டிருக்கின்ற கழக இயக்கம்தான் தமிழ்நாட்டிற்கு எப்போதுமே காவலரணாக இருக்கும் என்றுக்கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

இவ்வாறு ‘இனமுரசு’ சத்யராஜ் உரையாற்றினார்.

---

## ‘நீயெல்லாம் பத்திரிகையாளரா?’— என

# நாக்கை துருத்தி மிரட்டல் விடுத்த தூத்துக்குடி ஏ.டி.எஸ்.பி.!

## தூத்துக்குடியில் பரபரப்பு!

*தூத்துக்குடி, ஜூலை 22-*

*தமிழக முதல்வர் குறித்து பேசியதால் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனனை கைது செய்து 14 நாள் அதாவது ஆகஸ்ட் 3ந் தேதி வரை நீதிமன்ற காவல் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*முன்னதாக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிக்கையாளர்களை நாக்கை துருத்தி தூத்துக்குடி ஏ.டி.எஸ்.பி. ஒருமையில் பேசியது கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.*

*தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் முதல்வர் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.*

*இந்நிலையில், தமிழக முதல்வர் குறித்து அவதூறு பரப்பும் வகையிலும் மிரட்டல் விடுக்கும் வகையிலும் பேசியதாக தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் காவல்நிலையத்தில் தவெகவினர் புகார் அளித்தனர். இதனையடுத்து தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறையினர் 351(3), 352, 353(2) BNS என்ற மூன்று பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை கைது செய்து தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.*



*காலை 7:30 மணி அளவில் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கூட்டி வந்த நிலையில், மாலை 6:30 மணிக்கு தான் விசாரணை முடிவு பெற்றது. சுமார் 11 மணி நேரமாக நடைபெற்று வந்த விசாரணை முடிந்து உடல் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். முன் வாசல் வழியாக வராமல் தூத்துக்குடி மார்க்கண்டேயனை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பின்புறமாக உள்ளே அழைத்துச் சென்றனர் போலீசார்.*

**துப்பாக்கி முனையில் போலீசார் மிரட்டல்!**

*தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் அவர் உள்ளே செல்லும் பொழுது என்னை துப்பாக்கி முனையில் மிரட்டுகிறார்கள் என்றும், பிரேத பரிசோதனை அறிக்கை கொண்டு சென்று என்னை கொல்லப் பார்ப்பதாகவும் சொல்லிக் கொண்டே சென்றது பரபரப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து, அவரை நீதிமன்றத்தில் போலீசார் ஆஜர்படுத்தினர். போலீசார். வழக்கை விசாரித்த நீதிபதி அவரை 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார்.*

*இந்நிலையில், தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்த தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனிடம் பேட்டி எடுக்க பத்திரிகையாளர்கள் முயன்றனர். அப்போது தூத்துக்குடி ஏடிஎஸ்பி திபு பத்திரிகையாளர்களை ஒருமையில் பேசி நாக்கை துருத்தி,” நீங்கள் பத்திரிகையாளர்களா? ரவுடிகளை என ஒருமையில் பேசியதோடு, அவர்களை பத்திரிகையாளர்களை பணி செய்யவிடாமல் தடுத்தார். இதனால் பத்திரிகையாளர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.*

---

## வாடகை வீடுகளில் அதிகரிக்கும் மோதல்கள்!

# ஷாக் அடிக்கும் மின் கட்டண உயர்வு!

## ஆளில்லாத வீடுகளுக்கும் ரூ.4,000 பில்!

*சென்னை, ஜூலை 22-*

*தமிழ்நாட்டில் திடீர் மின்கட்டண உயர்வால் குடியிருப்போர் பாதிக்கப்பட்டுள்ளனர். மின் கட்டணத்தைப் பார்த்த மக்கள், இன்னும் அந்த ஷாக்கில் இருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். தமிழ்நாடு முழுவதும் உள்ள பல மாவட்டங்களில், வீடுகள் பூட்டப்பட்டிருந்த நிலையிலும் மற்றும் பயன்பாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின் கட்டணம் பன் மடங்கு உயர்ந்து வருவது மின் நுகர்வோரிடையே பெரும் கவலையையும் பொருளாதார நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது.*

*வழக்கமாக ரூ.700 முதல் ரூ.900 வரை வந்து கொண்டிருந்த மாதாந்திர மின் கட்டணம், பயன்பாடு பெரியளவில் மாறாத சூழலிலும் திடீரென ரூ.4,000க்கு மேல் உயர்ந்துள்ளது. இது ஏதோ ஒரு குறிப்பிட்ட நகரில் அல்லது குறிப்பிட்ட வீடுகளில் மட்டும் நடக்கும் சம்பவமல்ல; மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான நுகர்வோர்கள் இதேபோன்ற மின் கணக்கீட்டுக் குளறுபடிகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.*

*மின் கணக்கீடு மற்றும் கட்டண அமைப்பில் உள்ள சில நடைமுறை மற்றும் தொழில்நுட்பப் பிரச்சினைகளே மாநிலம் தழுவிய அளவில் இத்தகைய திடீர் உயர்வுக்குக் காரணமாக அமைகின்றன. வீடுகள் பூட்டியிருக்கும் வேளையில் நேரில் ஆய்வு செய்யாமல் முந்தைய கால பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தோராயமான யூனிட்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அதேவேளையில், ஆள் இருக்கும் வீடுகளிலும் கணக்கீட்டாளர்கள் ரீடிங் எடுப்பதில் தாமதம் செய்வதாலும் அல்லது சில யூனிட்டுகளை கூடுதலாகக் கணக்கிடுவதாலும் கட்டணம் பல மடங்கு உயர்கிறது.*

*குறிப்பாக, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் கணக்கீட்டாளர் பணியிடங்களில் 60 சதவீதமும், ஆய்வாளர் பணியிடங்களில் 42 சதவீதமும் காலியாக உள்ளதால், போதிய பணியாளர்கள் இன்றி கள ஆய்வுகள் சரிவர நடப்பதில்லை என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகியுள்ளது. தவறான கணக்கீடு, தாமதமான ரீடிங் மற்றும் பழுதான மீட்டர்களால் பொதுமக்கள் சந்திக்கும் சிரமங்களை கருத்தில் கொண்டு, தவறு செய்யும் பணியாளர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மின் வாரியம் எச்சரித்துள்ளதுடன், பிழையற்ற கணக்கீட்டை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.*

*மின் கட்டண அமைப்பில், பயன்பாடு 500 யூனிட்டுகளை தாண்டும் போது ஒரு யூனிட்டுக்கான கட்டண விகிதம் பல மடங்கு உயர்கிறது. கணக்கீட்டின் போது தவறாக அல்லது தாமதத்தால் சில யூனிட்டுகள் கூடுதலாகப் பதிவானாலும் கூட, பில் தொகை ரூ.900லிருந்து நேரடியாக ரூ.4,000 முதல் ரூ.5,000 வரை எகிறி, குடும்பங்களின் மாதாந்திர வரவுசெலவு திட்டத்தை தலைகீழாக மாற்றுகிறது.*

*மேலும், புதிதாக வாடகைக்கு குடிவருபவர்கள் வீடு பூட்டியிருக்கும் பட்சத்தில், அந்த வீட்டின் முந்தைய குடியிருப்பாளர்கள் செலுத்திய அதிகப்படியான மின் கட்டணக் கணக்கீடே புதியவர்களுக்கும் தோராய பட்டியலாகப் பதிவேற்றப்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. தவறாகக் கணக்கிடப்பட்டு வரும் மின் கட்டணத்தைச் சரி செய்வதற்கு நுகர்வோர்கள் மின்சார வாரிய அலுவலகங்களுக்கு பலமுறை அலைந்து திரிந்து மனு அளிக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொடரும் வெயிலின் தாக்கம் காரணமாக பொதுமக்கள் இரவில் ஏசியை அதிகமாகப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.*

*இதனால் இயல்பான பயன்பாடு சற்று அதிகரிக்கும் போது, தற்போதைய அடுக்கு கட்டண முறையினால் மொத்தத் தொகை கட்டுக்கடங்காமல் உயர்ந்து அனைத்து தரப்பு நடுத்தரக் குடும்பங்களுக்கும் பெரும் நிதிச் சுமையாகவும் மன உளைச்சலாகவும் மாறியுள்ளது. அதே சமயம் இந்த திடீர் கட்டண உயர்வால் வாடகை வீட்டில் வசிபோர்கள் அதிகமாக மின்சாரம் உபயோகிப்பதாக உரிமையாளர்கள் மற்றும் வாடகை குடியிருப்போர்கள் இடையே சண்டை எழுந்து வருகிறது. ஒரே மீட்டரை பகிர்ந்து கொள்ளும் வீடுகளில் தோராயக் கணக்கீட்டினால் கட்டணம் உயரும் போது, தொகையைப் பிரித்துக் கட்டுவதில் தினமும் மோதல்கள் வெடிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.*